கடவுளின் குடும்பத்தை ஆளும் திருத்தூதர்களின் வழித்தோன்றல்களான ஆயர்களைப் பற்றிய கோட்பாட்டையும், எல்லாருக்கும் முன்பாக வெளிப்படையாக அறிக்கையிட்டுக் கூற இத்திருச்சங்கம் முடிவு செய்துள்ளது.

### என்: 19. திருத்தூதர் குழு

ஆண்டவர் இயேசு தந்தையை நோக்கி வேண்டிய பின்பு, தாம் விரும்பியவர்களை தம்மிடம் அழைத்தார்ஃ தம்மோடு இருக்கவும் கடவுளின் ஆட்சியைப் பறைசாற்ற அனுப்பவும் அவர்களுள் பன்னிருவரை நியமித்தார் (மாற் 3:13-19; மத் 10:1-42). இந்தத் திருத்தூதர்களை (லூக் 6:13) ஒரு குழுவைப்போல அதாவது நிலையான ஒரு கூட்டத்திற்கு ஒப்பாக அமைத்தார். இவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பேதுருவின் இக்குழுவிற்குத் தலைவராக நியமித்தார் (யோவா 21:15-17). தமது ஆணையுரிமையிலே பங்குபெற்று எல்லா மக்களையும் தம் சீடர்களாகவும் தூய்மைப்படுத்தவும் வழிநடத்தவும் (மத் 28:16-20; மாற் 16:15; லூக் 24:45-48; யோவா 20:21-23), இவ்வாறு உலக முடிவுரை (மத் 28:20) திருஅவையைப் பரப்பவும், திருத்தூதர்களை அனுப்பினார் (உரோ 1:16). இப்பணியில், "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (திப 1:8) என்ற ஆண்டவரின் வாக்குறுதிக்கு ஏற்பப் பெந்தகோஸ்து நாளில் அவர்கள் முற்றும் உறுதிப்படுத்தப்பட்டார்கள் (திப 2:1-26).

### என்: 20 திருத்தூதர்களின் வழிவருபவரான ஆயர்கள்

மக்கள் குழுவில் தான் கடவுளின் திருஅவையை ஊட்டி வளர்க்குமாறு தூய ஆவி அவர்களை நியமித்திருந்தார் (திப 20:28). எனவே, திருத்தூதர்கள் இத்தகையோரை நியமித்து, அவர்களைத் திருநிலைப்படுத்தி, அவர்கள் இறந்த பின்பு ஒப்புதல் பெற்ற வேறு சிலர் அவர்களது பணியை மேற்கொள்வதற்கான ஒழுங்கு செய்தனர். திருஅவையில் அதன் தொடக்கக் காலத்தில் இருந்தே பல்வேறு பணிகள் ஆற்றப் பெறுகின்றன் மரபு கூறும் சான்றுப்படி தொடக்கத்திலிருந்தே தொடர்ச்சியாக வழிவந்துள்ள. ஆயர் நிலையில் நியமிக்கப்பட்டு, திருத்தூதுவித்தை வாழையடி வாழையாக அள்ப்பவர்களின் அலுவல் இப்பணிகளுள் முதலிடம் வகிக்கிறது. இவ்வாறு தூய இரேனேயுவின் சாட்சிக்கு ஒப்ப, திருத்தூதர்களால் ஆயர்களாக நியமிக்கப்பட்டவர்கள் வழியாகவும், இன்றுவரை தொடர்ச்சியாக வந்திருக்கும் அவர்களின் வழித்தோன்றல்களின் மூலமாகவும் திருத்தூது மரபு உலக முழுவதிலும் வெளிக்காட்டப் பெற்றுப் பாதுகாக்கப்படுகிறது.

மறைக் கோட்பாடுகளைக் கற்பிப்பவர்களாகவும் திருவழிபாட்டில் திருப்பணியாளர்களாகவும் ஆளுகையில் தொண்டர்களாகவும் ஆயர்கள் தங்கள் மக்கள் குழுவில் கடவுளுக்குப் பதிலாகத் தலைமை வகிக்கின்றனர். திருஅவையை ஊட்டி வளர்க்கும் திருத்தூதர்களின் பணியும் நிலையானதே. இப்பணி ஆயர்களின் திருக்குழுவால் என்றும் செயல்படுத்தப்பட வேண்டியது. எனவே, கடவுள் நிறுவியபடி, ஆயர்கள் திருஅவையின் அருள்பணியாளர்களாகத் திருத்தூதர்களின் இடத்தைப் பெற்றுள்ளனர் என்றும் ஆயர்களுக்குச் செவிசாய்ப்பவர் கிறிஸ்துக்குச் செவிசாய்க்கிறார், அவர்களைப் புறக்கணிப்பவர் கிறிஸ்துவையும், அவரை அனுப்பினவரையும் புறக்கணிக்கிறார் (லூக் 10:16) என்றும் திருச்சங்கம் கற்பிக்கிறது.

INTERNAL CIRCULATION ONLY
BUL 52/2023

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல directorapikl@gmail.com

NEW WAY OF BEING CHURCH

newbec

23 & 24 டி ம்பர 2023
திருவருகைக் கால நான்காம் வாரம்



**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும் தன்னார்வ தொண்டும்

மாதாந்திர நிகழ்வு:
திருவருகையும் கிறிஸ்து பிறப்பும்



# LUMEN GENTIUM

## இரண்டாம் வத்திக்கான் சங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

**21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது**

### இயல் 3: திருஅவையின் ஆட்சியமைப்பும் சிறப்பாக ஆயர்நிலையும்

**என்: 18.** ஆண்டவரின் கிறிஸ்து இறைமக்களை ஊட்டி வளர்ப்பதற்காகவும் என்றும் அவர்கள் பெருகுவதற்காகவும் தமது திருஅவையிலே பல்வேறுபட்ட பணிகளை ஏற்படுத்தினார். இறைமக்கள் குலத்தைச் சேர்ந்திருப்பவர்களும் இதனால் உண்மையிலே கிறிஸ்தவருக்குரிய மாண்பைப் பெற்றிருக்கும் அனைவரும் ஒரே குறிக்கோளை அடையத் தன்னுரிமையுடனும் ஒழுங்குடனும் ஒன்றாக உரழத்து நிறைவாழ்வைப் பெறும் பொருட்டே இத்தொண்டு உளது. என்றும் வாழும் மேய்ப்பரான இயேசு, தந்தை தம்மை அனுப்பியதுபோல தாமும் திருத்தூதர்களை அனுப்பி (யோவா 20:21) தமது தூயத் திருஅவையைக் கட்டி எழுப்பினார் என்று முதல் வத்திக்கான் திருச்சங்கம் கற்பித்து அறிக்கையிடுகிறது. திருத்தூதர்களின் வழித் தோன்றல்களாகிய ஆயர்கள் தமது திருஅவையிலே உலக முடிவு வரை அருள்பணியாளர்களாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து திருவுளங்கொண்டார்; இதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் பதிலாளும் திருஅவை முழுவதன் காணக்கூடிய தலைவருமான பேதுருவின் வழிவருபவருடன் உயிருள்ள